//மின்னஞ்சலில் //

தமிழ்நாடு பள்ளிக் கல்வி இணை இயக்குநரின் (பணியாளர் தொகுதி) செயல்முறைகள்,

ந.க.எண். 56939 / அ4 / இ4 / 2023, நாள். 11.09.2023.

*****

பொருள்: தமிழ்நாடு அமைச்சுப்பணி - உதவியாளர், இளநிலை உதவியாளர், தட்டச்சர், மற்றும் சுருக்கெழுத்து தட்டச்சர் நிலை-III - 2024-2025ஆம் ஆண்டிற்கான காலிப்பணியிட மதிப்பீடு விவரம் கோருதல்- சார்பு.

பார்வை:

1. தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத் துணைச் செயலாளரின் கடிதம் ந.க. எண். 790/RND-D1/2023, நாள். 24.08.2023.
2. தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத் துணைச் செயலாளரின் கடிதம் ந.க. எண். 2135/RND-B2/2023, நாள். 30.08.2023.

*****

பார்வையில் காணும் கடிதங்களில் பள்ளிக் கல்வித் துறையில், 2024-2025ஆம் ஆண்டிற்குரிய தங்கள் நியமன அலகிற்கான உதவியாளர், இளநிலை உதவியாளர், தட்டச்சர், சுருக்கெழுத்து தட்டச்சர் நிலை-III ஆகிய பதவிகளுக்கான நேரடி நியமன காலிப்பணியிட மதிப்பீட்டினைத் தயார் செய்து அனுப்புமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

எனவே, 2024-2025ஆம் ஆண்டிற்குரிய உதவியாளர், இளநிலை உதவியாளர், தட்டச்சர், சுருக்கெழுத்து தட்டச்சர் நிலை-III ஆகிய பதவிகளுக்கான நேரடி நியமன காலிப்பணியிட மதிப்பீட்டினைத் தயார் செய்யும் பொருட்டு, 15.03.2024 முதல் 14.03.2025 வரை **பதவி உயர்வு மற்றும் ஓய்வு பெறுவதால் ஏற்படக் கூடிய காலிப் பணியிடங்கள்** குறித்த விவரத்தினை இணைக்கப்பட்டுள்ள படிவத்தில் **பணியிடம் வாரியாகத் தனித்தனியாகத்** தயார் செய்து வருவாய் மாவட்ட அளவில் தொகுப்புப் பட்டியலைத் தயாரித்து 15.09.2023க்குள் Excel-லில் TAU-Marutham Font (மருதம்)இல் விவரங்களைப் பூர்த்தி செய்து, இவ்வலுவலக "அ4" பிரிவு (cosea4sec@gmail.com) **என்ற மின்னஞ்சல் முகவரிக்கும், முதன்மைக் கல்வி அலுவலரின் கையொப்பமிட்ட நகல் ஒன்றினை இணை இயக்குநர் (பணியாளர் தொகுதி) அவர்களின் பெயரிட்ட முகவரிக்கும்** அனுப்பி வைக்க வேண்டுமென அனைத்து முதன்மைக் கல்வி அலுவலர்கள் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

**இணைப்பு:** படிவம் - 1 மற்றும் 2

11.9.23

**இணை இயக்குநர் (பணியாளர் தொகுதி)**

பெறுநர் - அனைத்து முதன்மைக் கல்வி அலுவலர்கள்.

நகல்: திட்ட இயக்குநர், ஒருங்கிணைந்த பள்ளிக் கல்வி, சென்னை-6.
நகல்: இயக்குநர், தொடக்கக் கல்வி இயக்ககம், சென்னை-6.
நகல்: செயலர், ஆசிரியர் தேர்வு வாரியம், சென்னை-6.
நகல்: இயக்குநர், தனியார் பள்ளிகள் இயக்ககம், சென்னை-6.
நகல்: இயக்குநர், பள்ளிசாரா மற்றும் வயது வந்தோர் கல்வி இயக்ககம், சென்னை-6.
நகல்: இயக்குநர், மாநிலக் கல்வியியல் ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனம், சென்னை-6.

} காலிப்பணியிட மதிப்பீடு குறித்துத் தங்கள் அலுவலகம் சார்ந்த விவரங்களை இணைக்கப்பட்டுள்ள படிவத்தில் அனுப்பி வைக்குமாறு பணிவுடன் கேட்டுக் கொள்ளப்படுகிறது.

நகல்: இவ்வலுவலக அ2 பிரிவு (இவ்வலுவலகம் சார்ந்த விவரங்களை அளிக்கும் பொருட்டு).

படிவம்–1

வருவாய் மாவட்டம்:

உதவியாளர், இளநிலை உதவியாளர், தட்டச்சர் மற்றும்
சுருக்கெழுத்து தட்டச்சர் நிலை–III பணியிடம்

(ஒவ்வொரு பணியிடத்திற்கும் தனித்தனியாக படிவம் இணைக்கப்பட வேண்டும்)

| வ. எண். | 14.03.2024ன்படியான காலிப்பணியிடம் (பள்ளி / அலுவலகம்) | காலியேற்பட்டதற்கான காரணம் | எந்த தேதி முதல் காலி ஏற்பட்டது |
|---|---|---|---|
| | | | |

சான்று

இம்மாவட்டத்தில் உள்ள இளநிலை உதவியாளர் / தட்டச்சர் / சுருக்கெழுத்துத் தட்டச்சர் நிலை III பணியிடங்கள் சார்ந்து அளிக்கப்பட்டுள்ள மேற்படி விவரங்கள் அனைத்தும் ஆவணங்களின்படி உறுதி செய்து அளிக்கப்பட்டுள்ளது என சான்றளிக்கப்படுகிறது.

முதன்மைக் கல்வி அலுவலர் கையொப்பம்

படிவம்-2

வருவாய் மாவட்டம்:

உதவியாளர், இளநிலை உதவியாளர், தட்டச்சர் மற்றும்
சுருக்கெழுத்து தட்டச்சர் நிலை-III பணியிடம்

(ஒவ்வொரு பணியிடத்திற்கும் தனித்தனியாகப் படிவம் இணைக்கப்பட வேண்டும்)

| 15.03.2024 முதல் 14.03.2025 வரையான காலத்தில் பணி ஓய்வு / விருப்பு ஓய்வு / இதர காரணமாக ஏற்படவுள்ள காலிப்பணியிடம் விவரம் | | | |
|---|---|---|---|
| வ. எண். | ஓய்வு பெறும் பணியாளரின் பெயர், பதவி மற்றும் பள்ளி/ அலுவலகம் (திரு. / திருமதி / செல்வி) | பிறந்த நாள் | ஓய்வு பெறும் நாள் |
| | | | |

சான்று

இம்மாவட்டத்தில் உள்ள இளநிலை உதவியாளர் / தட்டச்சர் / சுருக்கெழுத்துத் தட்டச்சர் நிலை III பணியிடங்கள் சார்ந்து அளிக்கப்பட்டுள்ள மேற்படி விவரங்கள் அனைத்தும் ஆவணங்களின்படி உறுதி செய்து அளிக்கப்பட்டுள்ளது எனச் சான்றளிக்கப்படுகிறது.

முதன்மைக் கல்வி அலுவலர் கையொப்பம்.